# அர்ப்பணப் பூ நானாக உன்னிடம் வந்தேன்

அர்ப்பணப் பூ நானாக
உன்னிடம் வந்தேன்
எனை அர்ச்சனையாய் கையளிக்க
உன்னகம் வந்தேன்

**1**
கவலைகளால் உருக்குலைந்த
உலகம் யாவுமே
உந்தன் கருணையினால் உருவெடுக்கும் கருவியாகுமே
காரிருளின் நடுவினிலும்;
கலங்கரை விளக்காய்
உந்தன் பேரருளின் பெருந்துறையில்
கையளிக்க நான் .....பலிதருகின்றேன்

**2**
நாயகனே உன்னை நம்பி
நானிலத்தில் நான்
இன்று அடியெடுத்து வைக்கின்றேன்
வழி நடத்துமே
இலட்சியத்தின் பாதைகளின்
இடர்களைத் தாண்டி
உந்தன் இறையரசைப் பரப்புகின்ற
உறுதி வேண்டி நான் ....பலி தருகின்றேன்